# வளன் சனித்த படலத்தில் கவிதை வளம்

*முனைவர் பா. ஸ்ரீரெங்கநாதன்*
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
தி.தெ.ம.நா.ச கல்லூரி , தெற்குக் கள்ளிகுளம்

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i2-July.6487

### *முன்னுரை*

கிறித்தவக் காப்பியங்களுள் ஒன்றான தேம்பாவணியை இயற்றியவர் வீரமாமுனிவர் ஆவார். இவர் இத்தாலியில்1680-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ஆம் நாள் பிறந்தார். வீரமாமுனிவரின் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் கான்ஸ்டான்சியுஸ் ஜோசப் பெஸ்கி ஆகும். இவர் சமயப்பணி ஆற்றுவதற்காக கி.பி. 1710-ம் ஆண்டு புறப்பட்டு, 1711-ம் ஆண்டு மே 8-ம் நாள் மதுரையை வந்தடைந்தார். தமிழ் மக்களிடையே கிறித்தவ மதத்தை பரப்பவும்,

அதன் உயர் கருத்துக்களை தெளிவாக அவர்களுக்குப் புரிய வைக்கவும் தமிழ் மொழியை கற்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார். ஆகவே சுப்ரதீபக் கவிராயர் என்பவரிடம் தமிழ் பயின்றார். தமிழின் இனிமையையும் சிறப்பையும் நன்குணர்ந்த வீரமாமுனிவர் தமிழ்மீது காதல் கொண்டார். அதன் பயனாகவே தமிழ்ப்புலவர்களுக்கு இணையாக ஏராளமான படைப்புகளைத் தமிழுலகுக்குத் தந்தார். குறிப்பாக, தண்டியலங்காரம் குறிப்பிடும் காப்பிய இலக்கணத்தின் வழிநின்று தேம்பாவணி படைத்திருப்பது அவருடைய அறிவாற்றலுக்கு உரிய ஒப்பற்ற சான்றாகும். இக்கட்டுரையில் தேம்பாவணியில் உள்ள மூன்றாவது படலமாகிய வளன் சனித்த படலத்தின் வளங்குறித்துக் காண்போம்.

### வளன் சனித்த படலம்

இப்படலம் காப்பியத் தலைவனாகிய வளன் (சூசையப்பர்) பிறந்த செய்தியைக் கூறுகின்றது. தாவீதின் சந்ததியில் பிறந்த சூசையப்பர் அரசமரபில் பிறந்தும் கைத்தொழில் செய்து புண்ணியச் செயல்களால் மூவுலகு ஆள வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். தாவீதரசன் மரபில் தோன்றிய சகோபு என்பவரின் மனைவி நீப்பி கருவுற்ற நிலையிலேயே குழந்தையின் பழவினையாகிய சென்மப் பாவம் இறைவனால் நீக்கப்பட்டது என்றும், அதனால் நீப்பி பிரசவ வேதனையின்றி குழந்தையைப் பெற்றெடுத்து மகிழ்ந்தாள் என்றும், அக்குழந்தையே சூசையப்பர் என்றும் இப்படலத்தில் செய்திகள் நிரப்பியுள்ளன. சூசையப்பரின் தாய் நீப்பி தன் குழந்தையை ஆசீர்வ திக்குமாறு இறைவனை வேண்டியபோது, ஆகாயத்தில் இருந்து, “அறத்தின் சிறப்பால் இவன் என் மார்பில் அணியும்

தேம்பாவணியாவான்" என்று ஒரு குரல் கேட்டது. இவ்வாறு அசரீரி வாக்காக இட்ட "தேம்பாவணி" என்னும் பெயரே நூல் பெயருமாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது. காப்பிய இலக்கணப்படி நாட்டுப்படலம், நகரப்படலம் என இரண்டு படலங்கள் வளன் சனித்த படலத்திற்கு முன்னால் இடம் பெற்றாலும், இப்படலத்தையே காப்பியத்தில கதைப்போக்கின் உயிராக வீரமாமுனிவர் அமைத்துள்ளதைக் கவனிப்பது சாலச் சிறந்ததாகும்.

**கவிதை வளம்**

ஒரு காப்பியம் முழுமையடைய வேண்டுமானால் கவிதை வளம் மிகமிக அவசியம். இதனை மனதில் கொண்டு வீரமாமுனிவர் காணுமிடமெல்லாம் கற்பனை வளமிக்கக் கவிதைகளை ஈந்துள்ளார். ஆற்றல்மிகு சொற்களால் செய்யுளைச் செதுக்கியுள்ளார். உணர்ச்சிப் பெருக்கால் உயிர் கவி தந்த இவர் உயர்ந்த உண்மைகளால் பாடல்களை அலங்கரித்திருக்கின்றார். ஒண்பொருள்களைக் கவிதைக்குள் ஒளித்து வைத்துள்ளார். இக்கட்டுரையில் வளன் சனித்த படலத்தில் இத்தகு ஆற்றல்கள் இனங்கண்டு மிளிர்வதை இயம்புகிறேன்.

**கற்பனைக் கருவூலம்**

ஒரு கவிஞனை அறிவு சார்ந்தவன் என அடையாளப்படுத்தும் மிக முக்கியமான கருவி கற்பனையே. அந்த வகையில் வீரமா முனிவர் தமது தேம்பாவணியில் உயரிய கற்பனைகளைக் கையாள்வதைக் கவனிக்க முடிகிறது. குறிப்பாக, வளன் சனித்த படலம் கற்பனைச் சோலையாகவே நீள்கிறது. கவிஞன் தான் கூறவரும் கருத்தை மிகைப்படுத்திக் கூறுவதற்காக கற்பனை எனும் ஓடம் ஏறிக் கவிதைப் பயணம் மேற்கொள்வான். படைப்பாளிகளின் ஆற்றல் கற்பனை வழியே தான் உச்சநிலை அடைகின்றது. தேம்பாவணியில் தாவீது மன்னனின் ஆற்றலைக் கற்பனை அழகுடன் வீரமாமுனிவர் கூறியிருப்பது உள்ளத்திற்கு இதமளிக்கிறது. பொதுவாக, வில்லில் இருந்து சர மழையைப் பொழிந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் வீரமாமுனிவர், இடியை உமிழ்கின்ற வில்லினை உடையவன் தாவீது எனக்கூறி கற்பனையின் உச்சத்திற்குச் செல்கின்றார். அதாவது அநீதியின் இறுதிக்காலத்தைக் குறிப்பிடுவதற்கென்றே "ஒளிதவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்" என்றுரைக்கிறார். சரம் ஒவ்வொரு உயிராக சாய்க்கும் தன்மையுடையது. ஆனால் இடி ஊழிக் காலத்தில் ஒட்டுமொத்த உயிர்களையும் அழிக்கத் தோன்றும் என்பர். ஆனால் கோலியாத் என்னும் இராட்சதன் ஒருவனின் அழிவால், பிலித்தியர் சேனையின் ஒட்டுமொத்த வீரர்களுக்கும் ஊழிக்காலத்தை நல்கின்று என்பதாலேயே, சரத்தை இடியோடு உருவகப்படுத்தி, வீரமாமுனிவர் கற்பனையின் வேந்தனாகின்றார். ஆகவேதான், வளன் சனித்த படலத்தின் 29-ம் பாடலில் "எல்லை பாய்ந்து இருள் இரிந்தென வீழ்தலும் கண்டார்" என்று வீரமாமுனிவர் கூறுகின்றார். சூரியன் தோன்றியதும் உலக இருள் ஒரு நொடிக்குள் மாய்ந்து ஒளி பிறப்பது போல், கோலியாத் என்னும் இருள் விலகி, இஸ்ரவேலர்களின் வாழ்வில் ஒளி தோன்றிற்று என்று கற்பனை வெளிச்சத்தைப் பாடலில் பாய்ச்சுகின்றார். இடியை அழிவின் கருவியாகவும், சூரியனை ஆக்கத்தின் கருவியாகவும் கற்பனை செய்து, ஆழமான பொருளையும், நாமெலாம் பருகிடத் தந்துள்ளார் ஒரு மேலை நாட்டவர்.

**வலிமையான சொற்கள்**

மரபுக் கவிதைகளை எழுதுவோர் பொதுவாக, சந்தத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக வெறும் வெற்று வார்த்தைகளைப் பயன்படுத்தி, கவிதையின் உயிரை உறிஞ்சி விடுவர். அவர்களிடம் வலிமையான வார்த்தைகள் துளியளவும் இருக்கவே இருக்காது. ஒரு கருத்தைக்கூற ஓராயிரம் பயனற்ற வார்த்தைகளைப்

பயன்படுத்தி, வாசகர்களுக்கு மயக்க ஊசி போடுவர். ஆனால் வீரமாமுனிவர் ஆற்றல்மிகு வார்த்தைகளை அடுக்கி, அடுக்கி உயிர் மாளிகைகளை (கவிதை) உருவாக்கியுள்ளார். ஆகவேதான் தேம்பாவணி காப்பியத்தகுதி பெற்றதாய் விளங்குகின்றது.

**தாவீதின் ஆட்சி சிறப்பை வர்ணிக்க முற்படும் புலவர்**

> **"கோல்நலம் கோடிலா நிறுவிக் கூர்த்தலால்**
> **நூல்நலம், பொருள்நலம் அறத்தின் நுண்நலம்**
> **தேன்நலம் இனிதினில் திளைந்து, நாடெலாம்**
> **மீன்நலம் பயின்றவான் வியப்ப வாழ்ந்ததே"**
> **(வ. ச. படலம் - 70)**

இவ்வாறு கவிதை யாத்துள்ளார். எதுகை அமைந்து இசை இன்பத்தை வெளிபடுத்தியதோடு, நான்கு வரிக்குள்ளும் நவமணிகளைப் பதித்தாற்போன்று ஒளிமிகுந்த கருத்துக்களை புதைத்து வைத்துள்ளார். கவிதைகள் உயிர் வாழ்வதற்கு உணர்ச்சி, சந்தம் போன்றவை மட்டும் போதாது, இது போன்ற கருத்துகள் செறிந்து கிடக்க வேண்டும்.

**உணர்ச்சிப் பெருவெள்ளம்**

கோலியாத் ஆணவத்தின் அற்றத்திற்கே சென்றவனைப் போன்று தாவீதைப் பார்த்து எள்ளி நகையாடி கோபக்கனல் மொழிகளைக் கொட்டுகிறான். இச்சம்பவத்தை,

> **"வாய்அடா! பிளந்து உயிர்ப்பிடமறுகி நீ நுண்தூள்**
> **ஆய்அடா! உலகு அப்புறத்து ஏகுவாய்"**

என்று வீரமாமுனிவர் ஆற்றல்மிகு சொற்களால் பாடல் செதுக்கியுள்ளார். இக்கவிதைக்கு "அடா" என்றச் சொல் உயிர் சோக்கிறது. கோபத்தின் உணாச்சிக் கோலம் கவிதையில் நெருப்பாயப் புத்துள்ளது. வாய்பிளந்து பெருமூச்சு விட்டாலே நீ இவ்வுலகத்துக்கு அப்பால் நுண் துகளாய்ச் சிதறி சேர்வாய் என்று தாவீதனை மிரட்டுகிற இடம் கம்பீரம்!

தொல்காப்பியம் குறிப்பிடும் "வெகுளி" என்னும் சுவையை இப்பாடல் வரிகள் நமக்குப் புகட்டுகின்றன. கோலியாத்தின் அச்சம் தரும் தோற்றத்தை,

> **"ஒளிசிறை செய்யும் ஒருகரும் பருவதம் என்னா**
> **வெளிசிறை செய்யும் வியன்இரு புயத்து மேல், சிரமே**
> **களிசிறை செய்யும் கதம்கொடு வெருவுறத் தோன்றும்"**

என்று வீரமாமுனிவர் காட்சிப்படுத்துகின்றார். இப்பாடலில் "அச்சம்" என்னும் மெய்ப்பாடு புலவரால் கையாளப்பட்டுள்ளது.

இப்படி உணர்ச்சிகளை அந்தந்த இடத்திற்குத் தகுந்தாற்போன்று எந்தக் குறைபாடும் இல்லாமல் கவிதைகளில் புகுத்தியிருப்பதால், கவிதை வளத்தைக் கண்டுகளிக்க ஏதுவாக உள்ளது.

**உவமையழகு**

கவிதைக்கு அலங்காரத்தை நல்குவது உவமையே என்றால் மிகையில்லை. ஒரு பெண்ணுக்கு ஆடையும் ஆபரணமும் மேன்மேலும் அழகு சேர்ப்பதைப் போன்று, கவிதை என்னும் பெண்ணுக்கு உவமை, ஒப்பற்ற அழகுடையதாய் ஆக்குகின்றது. தேம்பாவணியில் உவமைக்குப் பஞ்சமே இல்லை. கோலியாத்தை தாவீதன் வீழ்த் தியவுடன், "கூன் நெடும்பிறை குழைந்தவாய்" என்று அவனது அருவருப்பான பற்களை உவமை அழகுடன் கவிதையாக்கியுள்ளார் வீரமாமுனிவர்.

மேலும், சூசையப்பரின் அவதாரத்தை அவனிக்கு உரைக்க முற்படும்போது, வீரமாமுனிவர் அற்புதமான உவமைகள் பலவற்றைக் கையாண்டுள்ளதைக் கவனிக்க முடிகின்றது.

"எல்லின் கதிர்திரட்டித் திலகம் திங்கட்கு இட்டது போல்" என்னும் உவமையும்

"மொய்வாய்க் கடல்உலகின் திலதம் என்பார், முகம்கண்டார்" என்ற உவமையும்

"வான்மேல் வைத்தசுடர் கிடக்கும் வண்ணவடிவு" என்ற உவமையும்

சூசையப்பரின் தோற்றப் பொலிவினைத் திறம்பட உரைக்கின்றன.

**விண்நிகர் ஒண்பொருள்**

கவிதை எப்படித்தான் பிற உறுப்புகளால் ஆற்றல் பெற்றாலும், உள்ளடக்கம் வலிமை மிக்கதாய் அமைந்தால் மட்டுமே கவிதை வாழும். கவிஞரையும் வாழ வைக்கும். தேம்பாவணி என்னும் காப்பியமே, கிறித்தவ சமயக் கருத்துகளை வலியுறுத்த எழுதப்பட்ட ஒன்றாகும். ஆகவே கடவுளின் அற்புதங்களை ஆங்காங்கே ஒண்பொருளாக வீரமாமுனிவர் பதிவு செய்துள்ளார். அநேக இடங்களில் தாவீதின் கூற்றாக இறைவனின் ஆற்றல் எடுத்தியம்பப்படுவதை உணர முடிகின்றது.

தேம்பாவணியின் மையக்கருத்து யாதெனில், இறைவன்பால் நம்பிக்கை வைப்பவர்கள், எல்லா துன்பங்களிலிருந்தும் விடுபட்டு வாழ்வில் உயர்வடைவார்கள் என்பதேயாகும். வளன் சனித்த படலத்தில் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தும் இடங்கள் பல உள்ளன. அவை பெரும்பாலும் தாவீதரசனின் கூற்றாகவே இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தாவீது இஸ்ரவேலர்களிடம், கோலியாத்து பற்றி கேட்டறிந்த போது, "இறைவனைப் பழித்து மரணத்தை எதிர்கொண்ட கயவன் யார்" என்று ஆவேசமாக உரைக்கின்றான்.

**முடிவுரை**

வீரமாமுனிவர் ஒரு மேலைநாட்டுக் கிறிஸ்தவர்தான் என்றாலும், தமிழ்மீது அவர் கொண்ட காதலால், தமிழுக்கு அரும் பெரும் கொடைகளை வழங்கியுள்ளார். அந்த வகையில் அவர் இயற்றிய காப்பியமாகிய தேம்பாவணி, தமிழ்த்தாய் சூடிக்கொண்ட வாடா மாலையாக விளங்கினாலும், தேன் பாய்கின்ற பாக்கள் நிறைந்து அழகு சேர்க்கின்ற அற்புத மாலை என்றே இதனைக் கூறலாம். அந்த அளவுக்குக் கருத்தாலும், கற்பனையாலும், சொற்செறிவாலும், உணர்ச்சியாலும், உவமையாலும் உன்னதம் பெற்றுத் திகழ்கின்றது.